# “கடனிலிருந்து விவசாயிகளின் விடுதலை சட்டவரைவு 2017”

## *சுருக்கம்*

**அறிமுகம்**

இந்த சட்ட வரைவு இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்துகிறது.

1. தற்போது நிலுவையிலுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்வதன் மூலம் உடனடியாக கடனிலிருந்து நிவாரணம் அளிப்பது
2. ‘விவசாயிகளின் கடன் நிவாரணத்திற்கான ஆணையம்’ அமைப்பதன் மூலம் விவசாயிகளை எதிர்கால கடன்பிடியிலிருந்து பாதுகாப்பது

உடனடி கடன் தள்ளுபடி, ஆணையத்தால் அல்லாமல் அரசால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வங்கிக் கடன்களைத் தள்ளுபடி செய்வதுடன், இந்தச் சட்ட வரைவு, அமைப்பு சாரா கடன்களிலிருந்தும் நிவாரணம் அளிப்பதற்கான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. உடனடிக் கடன் நிவாரணத்தில், அமைப்பு சாரா கடன்கள், முறைப்படி வங்கிக் கடன்களாக அரசால் மாற்றப்பட்டு பின்பு தள்ளுபடி செய்யப்படும்.

எதிர்காலத்தில், கடன் நிவாரண ஆணையம், நலிவுற்ற பகுதிகள் மற்றும் பயிர்கள் ஆகியவற்றை அறிவித்தல்; குறிப்பிட்ட கடன் நிவாரணங்களைத் தொடங்குதல்; கூடுதல் வட்டிச் சுமையின்றி கடனுக்கான காலத்தை மாற்றியமைத்தல்; குறிப்பிட்ட கடன்களைத் தள்ளுபடி செய்யப் பரிந்துரைத்தல்; கடனை மாற்றியமைத்தல் மற்றும் கடன் வசூலித்தலை மூன்றாண்டுகளுக்குத் தடுத்தல் போன்ற அதிகாரங்கள் கொண்டதாக இருக்கும்

இந்த வரைவு, மாநிலங்கள் இயற்றுவதற்கான ஒரு மாதிரிச் சட்டத்தைக் கொண்டுள்ளது. அந்தச் சட்டத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகள், அமைப்பு சாரா கடன்கள் ஆகிய அனைத்து ஆதாரங்களின் மூலமும் உள்ள கடன்களை கையாளும் வகையில், மாநில அளவில் விவசாய கடன் நிவாரண ஆணையங்களை அமைத்தலை உறுதி செய்கிறது. இந்த வரைவு வற்புறுத்தல் மற்றும் சொத்துக்களை இணைத்தல்/ ஏலம் விடுதல் போன்ற செயல்களை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

எதிர்காலத்தில் கடனுக்குள்ளாவதைக் குறைப்பதற்காக பயிர்க்காப்பீடு, பேரிடர் நிவாரணம், குறைந்த செலவிலான நீடித்த வேளாண்மை ஆகியவற்றையும் இந்தச் சட்ட வரைவு உள்ளடக்கியுள்ளது.

*கடனில் சிக்குண்ட விவசாயிகளின் கடனை உடனடியாகத் தள்ளுபடி செய்தல் மற்றும் நிவாரணத்தை அறிவித்தல், கடன்பட்ட விவசாயிகளின் குறை நிவர்த்தி, அதனுடன் தொடர்புடைய மற்றும் எதிர்பாராத விஷயங்களுக்கான பரிந்துரைகள் அளித்தல் போன்ற அதிகாரங்களைக் கொண்ட ஆணையத்தை அமைத்து கடனில் நலிவுற்ற விவசாயிகளுக்குத் தொடர் நிவாரணத்தை அளிப்பதற்கான சட்ட வரைவு*

**அத்தியாயம் 1 : முக்கிய வரையறைகள்**

**“வேளாண்மை”** என்பது தோட்டக்கலை, மூலிகைச் செடிகள், பயிர்கள் மற்றும் கலப்புப் பயிர்கள், பழங்கள், காய்கறிகள், பால் உற்பத்தி, காடுகளிலுள்ள மதிப்பு குறைவான பொருட்களைச் சேகரித்தல், பூக்கள், புல், தீவனப்புல், மரங்கள் அல்லது மண்ணின் மூலம் செய்யப்படும் எந்த வேளாண்மையும், நாற்று/மரக்கன்றுப் பண்ணை நடத்துதல், சிப்பிமீன் உட்பட்ட கால்நடை வளர்ப்பு, தேனீக்கள், பட்டுப்புழு, கோழிவளர்ப்பு, வாத்து, மாடு அல்லது பன்றி வளர்ப்பு மற்றும் வேளாண்மை சார்ந்த அல்லது வேளாண்மை பயன்பாட்டிற்கான எந்த நடவடிக்கைகளுக்காகவும் நிலத்தைப் பயன்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது

**“விவசாயி”** என்பது நிலவுடைமை இருந்தாலும், இல்லாவிட்டாலும் பயிர்வளர்ப்பு அல்லது பிற முதன்மை வேளாண் பொருட்களின் உற்பத்தி போன்ற பொருளாதார மற்றும்/அல்லது வாழ்வாதாரச் செயல்பாடுகளில் ஊக்கத்துடன் ஈடுபடும் நபரைக் குறிக்கும். மேலும், இது அனைத்து வகையான பயிரிடுபவர்கள், உழுபவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஈட்டுக்குப் பயிர் செய்பவர்கள், குத்தகைதாரர்கள், கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள், கால்நடை வளர்ப்பவர்கள், மீனவர்கள், தேனீ வளர்ப்பவர்கள், மேய்ப்பாளர்கள், கார்ப்பரேட் அல்லாத தோட்டப் பயிரிடுவோர், தோட்ட வேலை செய்யும் தொழிலாளர்கள், காடுகளில் பொருட்களைச் சேகரிப்போர், கூட்டு நிலவுரிமை அல்லது குத்தகைக்கு நிலத்தை எடுத்துப் பயிர் செய்யும் சுயஉதவிக் குழுவைச் சார்ந்தவர்கள் ஆகியோரைக் குறிக்கும்.

**“கடன்”** என்பது இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் காலத்திற்கு முன்வரையுள்ள சொத்து இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படாத விவசாயிகளின் நிலுவையில் உள்ள எந்தக் கடனையும் குறிக்கும். மாநிலத்தின் குறிப்பிட்ட நலிவுற்றப் பகுதிகளைப் பொருத்தவரை, அது குறித்து அரசிதழில் வெளியிடப்பட்ட நாளோ அல்லது அதற்கு முன்போ ஒப்பந்தம், தீர்ப்பாணை அல்லது நீதிமன்றம் அல்லது குறைதீர்ப்பாணையத்தின் ஆணை ஆகியவற்றின் படி விவசாயிகள் செலுத்த வேண்டிய அமைப்புசார் மற்றும் தனியார்க் கடன்களைக் குறிக்கும். ஆனால், இது விவசாயிகள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள வேளாண்மை அல்லாத வணிகச் செலவுகளுக்காகவும், ஆடம்பர செலவுகளுக்காகவும் வாங்கிய பிற கடன்களைக் குறிக்காது.

**அத்தியாயம் II: உடனடிக் கடன் நிவாரணம்**

- நவம்பர் 20, 2017 வரை மொத்தம் நிலுவையிலுள்ள அமைப்புசார் கடன்கள் அனைத்தையும் நிபந்தனைகளில்லாமல் தள்ளுபடி கோர அனைத்து விவசாயிகளுக்கும் உரிமையளித்தல்
- ஒரே தவணையில் அனைத்து கடன் தள்ளுபடிகளும் நடைமுறைப்படுத்த வேண்டும். கடன் தள்ளுபடியால் நடவடிக்கை ஒருபுறமிருக்க அடுத்த வேளாண் பருவத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் புதிய கடன்களை வழங்க வேண்டும்
- அமைப்பு சாராக் கடன்களை, வங்கிக் கடன்களாக மாற்றுவது அரசால் நடைமுறைப்படுத்தப்படும்
- கடன் மாற்றம் நடந்தபின், வங்கிக் கடன் அரசால் தள்ளுபடி செய்யப்படும்
- கடந்த நிதியாண்டில் தொடங்கி, தள்ளுபடிக்காக நிர்ணயித்தக் காலம் வரை, கடனைத் திரும்பச் செலுத்திய விவசாயிகளுக்கு, அவர்களின் வங்கிக் கணக்கில் வளர்த்த பயிர்களுக்கான தொகை செலுத்தப்பட வேண்டும்

**அத்தியாயம் III: விவசாயிகளின் கடன் நிவாரண ஆணையம்**

- தேசிய விவசாயிகளின் நிவாரண ஆணையத்தில், ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியொருவர் தலைவராகவும், 9 உறுப்பினர்களும் இருப்பர். இதில் 2 நீதித்துறையைச் சார்ந்தவர்கள், 4 விவசாயப் பிரதிநிதிகள், 2 நிபுணர்கள், 1 பொருளாதார/கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர் ஆகியோர் இருப்பர். இந்த ஆணையத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஆனால், மீண்டும் நீட்டிக்கலாம்.
- சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விவசாயிகளின் குறைகளை வரப்பெறுவது, வழக்குகளைத் தீர்க்க ஆணைகள் இடுவது, அரசால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளைக் குறிப்பிடுவது ஆகிய பணிகளை இந்த ஆணையம் செய்யும்.
- எதிர்காலத்தில் இந்த ஆணையம், ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தையோ, அதன் பகுதியையோ பாதிக்கப்பட்டப் பகுதியாகவோ, ஒரு குறிப்பிட்ட பயிரைப் பாதிக்கப்பட்ட பயிராகவோ அறிவிக்க இயலும். தானாக முன்வந்தோ, வரப்பெற்ற மனுவின் அடிப்படையிலோ, தேவையான நிபுணர்களை நியமித்து ஆய்வு செய்து, இதை ஆணையத்தால் செய்ய முடியும்
- பாதிக்கப்பட்ட பகுதிகள்/ பயிர்களைப் பொருத்தவரை, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கி மற்றும் அமைப்பு சாரா கடன்களை முழுமையாகவோ, பகுதியாகவோ அரசே ஏற்றுக் கொள்ளுதல் உள்ளிட்ட கடன் நிவாரணங்களை அரசு வழங்க பரிந்துரைத்தல்
- பாதிக்கப்பட்ட பகுதிகள்/ பயிர்களைப் பொருத்தவரை, ஆணையம் (a) குறைந்த கால கடன்களை, நடுத்தரக் காலக் கடன்களாகவும், நடுத்தரக் காலக் கடன்களை, நீண்டக் காலக் கடன்களாகவும் மாற்ற உத்தரவிட முடியும் (b) குறிப்பிட்ட சில கடன்களை தள்ளுபடி செய்ய உத்தரவிடலாம் (c) விவசாயி தயாராக இருந்தால்

ஒருமுறையிலேயே கடனை அடைக்க அனுமதிக்கலாம் (d) அபராத வட்டி அல்லது மொத்த வட்டியையும் நிலைமையைப் பொருத்து தள்ளுபடி செய்யலாம்

- பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளின் கடன் விஷயங்களை முடிவுக்குக் கொண்டுவர, ஆணையம் சிறிய அமர்வுகளை மேற்கொள்ளலாம்
- அமைப்பு சாராக் கடன்களைப் பொருத்தவரை, ஆணையம்
    - நியாயமான வட்டிவிகிதத்தை நிர்ணயிக்கும். ஆணையத்தின் உத்தரவின் படி வட்டியை அரசே செலுத்தும்
    - பயிரிழப்பின் தன்மையை ஒட்டி, கடனைத் திரும்பச் செலுத்துவதை 3 ஆண்டுகளுக்கு மிகாமல் தள்ளி வைக்கலாம்
    - அமைப்பு சாராக் கடன்களை, வங்கிக் கடன்களாக மாற்றுவதை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணையிடும்
- வணிக வங்கிகளுடன் கடன் தொடர்பாக உள்ள பிரச்னைகள் குறித்து, நலிவுற்ற தனிப்பட்ட விவசாயிகளிடமிருந்து, மனுக்களை ஆணையம் பெறலாம். நிவராணத்தை உறுதிசெய்யும் வகையில் நடவடிக்கைக்கு உத்தரவிடலாம்
- பாதிக்கப்பட்ட பகுதிகள்/ பயிர்கள் அறிவிக்கப்பட்டபின், கடன் வசூலிப்பதற்காக, விவசாயிகளுக்கு எதிராக எந்த வழக்கையும் பதிவு செய்ய இயலாது
- கடன் வாங்கிய விவசாயிகளின் பெயர்களை வெளியிட்டு அவமானப்படுத்துவது, அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆணையம் தடுக்க முடியும்
- விவசாயி, அசலையும், அசலுக்கு ஈடான வட்டியையும் ஏற்கனவே கட்டியிருந்தால், கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாகவே கருதப்படும்
- ஆணையத்தின் முடிவுகள் மற்றும் தீர்ப்புக்களின்படி, தள்ளுபடி செய்யப்பட்ட கடன் அல்லது வட்டி, ஒருமுறை தவணையைச் செலுத்தும்படி அளிக்கப்படும் உத்தரவின் மூலம் உருவாகும் விளைவுகள் அல்லது காலமாற்றம் செய்யப்பட்ட கடன்கள் ஆகியவற்றை அரசே ஏற்றுக் கொள்ளும்

**அத்தியாயம் IV: மத்திய அரசின் பொறுப்புகள்**

- உடனடி கடன் நிவாரணத்திற்கான நிதியை ஒதுக்கீடு செய்வது. கடன் நிவாரண ஆணையத்தின் தீர்ப்புக்கள், உத்தரவுகள், பரிந்துரைகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது
- சில வகைகளைச் சார்ந்த சொத்துக்களை கடன் கொடுத்தவர்கள் இணைப்பதற்கும், ஏலமிடுவதற்கும் விலக்கு அளித்து மத்திய அரசு அறிவிப்பு வெளியிட வேண்டும்
- மாநில அரசுகள் இயற்றும் வண்ணம் ‘மாதிரிச் சட்டம்’ ஒன்றை மத்திய அரசு உருவாக்க வேண்டும். இந்த மாநிலச் சட்டங்கள் மூலம், கூட்டுறவு வங்கிகள் மற்றும் அமைப்புசாரா கடன்கள் உட்பட்ட கடன் நிவாரணம் தொடர்பான அனைத்து

விஷயங்களையும் கையாள்வதற்காக மாநில அளவிலான விவசாயிகளுக்கான கடன் நிவாரண ஆணையங்கள் அமைக்கப்படும்

- போதுமான மற்றும் பயனுள்ள பேரிடர் நிவாரணங்களையும், பேரிடர் காலங்களில், விவசாயிகள் கடன் பிடியில் சிக்காத வண்ணம் பயிர்க்காப்பீடு திட்டங்களையும் அரசு நடைமுறைப்படுத்தும்
- விவசாயிகள் கடனுக்குள்ளாவதைக் குறைக்கும் வகையில், அரசு, மிகப் பெரிய அளவில், குறைந்த செலவே ஆகும் சூழலியல் வேளாண்மையை பரப்ப வேண்டும்
- வங்கிக் கடன் முறையில் சிறு விவசாயிகளும், உண்மையான விவசாயிகளும் பயனடையும் வகையில், முன்னுரிமைத் துறைகளுக்கான கடனளிக்கும் விதிகளை மாற்றியமைக்க வேண்டும்

---

**அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழு (AIKSCC)**

**தொடர்புக்கு: க. பாலகிருஷ்ணன்: 94446-27827**